ஸ்ரீ ஹரி:

# பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்

# மதுரமுரளி

**(தெய்வீக மாதப் பத்திரிகை)**

வேணு : 6 ஆகஸ்ட் 2000 கானம் : 1

## விஷய ஸூசிகை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம் | 2 |
| 2. | மதுரமான மஹனீயர் - 57 | 3 |
| 3. | பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள் | 4 |
| 4. | வேத கதைகள் - 39 | 6 |
| 5. | எந்தரோ மஹானுபாவுலு - 27 | 8 |
| 6. | ஜ்யோதிஷம் - 6 | 19 |
| 7. | பாலகர்களுக்கு ஒரு கதை - 33 | 23 |
| 8. | அளவிலா விளையாட்டுடையான் | 25 |
| 9. | ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷணைகளிலிருந்து - 60 | 28 |

ஸ்ரீ ஹரி:

# ஸ்ரீ ஸ்வாமிகளின் கீர்த்தனம்

ராகம் : கமாஸ் தாளம் : ஆதி

பல்லவி

**அஸஞ்சல பக்திம் தேஹி - தவ சரணே**
**மஞ்ஜுள கோமள மங்கள சரணே (அஸஞ்சல)**

அனுபல்லவி

**காமயே ந அன்யம் புவனபதே**
**காமிதவரத பாமாபதே (அஸஞ்சல)**

சரணம்

**ஸனகாதிமுனீனாமபி துர்லபசரணே**
**ஸுரகணானாமபி கூடசரணே**
**ப்ரஹ்ம ருத்ராதி ஸேவிதசரணே**
**பாக்யமுரளீதர பாவித சரணே (அஸஞ்சல)**

நாமாவளி

**ஸ்ரீ க்ருஷ்ண சரணம் மம**
**ஸ்ரீ ஹரி சரணம் மம**

காவளம்பாடி திவ்யதேசம், ஸ்ரீ செம்பொன்செய் திருக்கோவில் திவ்யதேசம் - இவ்விரு திருநாங்கூர் திவ்யதேசங்கள் பாலாலயம் கண்டருளி திருப்பணிகள், நம் ஸ்வாமிகள் ப்ரேரணையால் துவங்குகின்றன.

## மதுரமான ஞானியர் 57

ஒவ்வொரு வருடமும் நம் ஸ்வாமிகள் நம்முடைய ஸத்ஸங்கத்தில் வ்யாஸ பூஜையை நடத்துவது வழக்கம். சென்ற வருடம் பெங்களூர் பக்தர்கள் அழைத்ததின் பேரில் நம் ஸ்வாமிகள் வ்யாஸ பூஜையை பெங்களூர் மல்லேஸ்வரத்தில் உள்ள ஸ்ரீ ஶங்கரமடத்தில் நடத்தினார்கள். அதைத் தொடர்ந்து ஒரு வாரம் ஸ்ரீ ஸ்வாமிகளின் உபன்யாஸமும் நடைபெற்றது. இந்த வருடம், பெங்களூர் அல்சூரில் உள்ள ஷீரடி ஸாயி ஸமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீநாகராஜ் என்பவர் அழைத்ததின் பேரில், வ்யாஸபூஜை பெங்களூர் ஸ்ரீ ஷீரடி ஸாயி ஸமாஜத்தைச் சேர்ந்த ஸ்ரீ ஷீரடி ஸாயி கோயிலில் நடைபெற்றது. வ்யாஸ பூஜை அன்று காலையில் பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. அதைத் தொடர்ந்து நம்முடைய பாடசாலை வேத ஸ்ரீ வித்வான் மல்லிகார்ஜுன ஶர்மா அவர்களால் வ்யாஸ பூஜை நடைபெற்றது.

வ்யாஸ பூஜை முடிந்தவுடன் மல்லிகார்ஜுன ஶர்மா அவர்களாலும், சேஷாசல ஶர்மா அவர்களாலும் வ்யாஸ பூஜையின் அவஶ்யத்தைப் பற்றியும், குருபூர்ணிமா வைபவத்தைப் பற்றியும் உபன்யாஸம் நிகழ்த்தப்பட்டது. பிறகு நம் ஸ்வாமிகளால் அங்கு குழுமியிருந்த ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு அக்ஷதை ப்ரஸாதமும் தீர்த்த ப்ரஸாதமும் கொடுக்கப்பட்டது.

அன்று மாலை கிரஹணத்தை ஒட்டி பெருமாளுக்கு விசேஷ திருமஞ்சனம் நடைபெற்றது. அதன் மறுநாள் தொடர்ந்து மூன்று நாட்களுக்கு மஹான்களின் சரித்ரத்தை ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாஸம் செய்தார்கள். திரளான ஜனங்கள் உபன்யாஸத்தைக் கேட்டு மகிழ்ந்தார்கள். ஸாயி ஸமாஜத்திலும் தினமும் நாமஸங்கீர்த்தனம் நடக்க வேண்டும் என்று தன்னுடைய அவாவை ஸ்ரீ ஸ்வாமிகள் தெரிவிக்க, அவர்களும் தினமும் நாம ஸங்கீர்த்தனம் செய்து வர ஆர்வத்துடன் ஸம்மதித்தார்கள்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

# பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீ ஸ்வாமிகளின் பதில்கள்

*கேள்வி : க்ருஷ்ணாவதாரத்தில், பகவான் பல சூழ்ச்சிகளை செய்துதான் பாண்டவர்களுக்கு ஜயத்தை பெற்றுத் தருகின்றான். மேலும், ஸ்ரீமத் பாகவதத்தில், பகவான் ராஸக்ரீடை செய்த வர்ணனையும் உள்ளது. இவைகள் எல்லாம் எப்படி சரியாகும்?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸ்ரீ ராமாவதாரம் என்பதில் பகவான், தான் ஒரு மனுஷ்யனாக இருக்கவேண்டும் என்று ஆசைப்பட்டு, ஒரு உத்தம மனிதன் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டுமோ அப்படியெல்லாம் நடந்து கொண்டான். ராமன் மீது ஏதாவது பெரிய தோஷம் கற்பிக்க விரும்பினால், வாலியை மறைந்திருந்து அடித்தது எப்படி சரியாகும்? அல்லது கர்ப்பவதியாக இருக்கும் ஸீதையை வால்மீகி ஆஶ்ரமத்தில் கொண்டுவிட்டது எப்படி சரியாகும்? என்ற கேள்விகளைத்தான் கேட்க முடியும்.

ஆனால் க்ருஷ்ணாவதாரத்தில், வெளிப்படையாக அதர்மம் போல் தோன்றும் கார்யம் எல்லாம் தர்மமே. தர்மம் என்பது மிகவும் சூக்ஷ்மமானது. ராம சரித்ரம் ஸாமான்யர்களுக்கும் புரியக்கூடியது. ஸாமான்யர்களாலும், பின்பற்றக்கூடியது. ஆனால் க்ருஷ்ண சரிதம் ஸாமான்யர்களுக்கு புரியாதது. ஸாமான்யர்களால் பின்பற்றவும் முடியாதது. ராமாவதாரத்தில் தர்மம்தான் ப்ரதானம். கிருஷ்ணாவதாரத்தில் ரஸம்தான் ப்ரதானம்.

மஹான்களுடைய சரித்ரத்தை எடுத்துப் பார்த்தோமானால், காஞ்சி மஹாபெரியவாள், ரமண மஹரிஷிகள் போன்றவர்களின் வாழ்க்கை சரித்ரங்கள் எல்லோருக்கும் புரியக்கூடியது. எல்லோராலும் அவஶ்யம் கடைப்பிடிக்கப்பட வேண்டியது. ஆனால் தத்தாத்ரேயர் சரித்ரம், ஷீரடி ஸாயிபாபா சரித்ரம், ராமக்ருஷ்ண பரமஹம்ஸர் சரித்ரம், சேஷாத்ரி ஸ்வாமிகள் சரித்ரம் போன்றவைகள் யோகீஶ்வரர்களுக்கு மட்டுமே புரியக்கூடியது. யோகீஶ்வரர்களே பின்பற்றக்கூடியது.

*கேள்வி : கர்னாடக ஸங்கீதம் வேதத்தின் ஒரு அங்கமா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஸாமவேதத்தின் உப வேதமாகவே காந்தர்வ வேதம் சொல்லப்பட்டுள்ளது.

*கேள்வி : கர்னாடக ஸங்கீதத்தின் ஆதாரம் எது?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : வங்காள தேசத்தைச் சேர்ந்த ஶார்ங்க தேவர் என்ற மஹாத்மா எழுதியுள்ள ஸங்கீத ரத்னாகரம் என்ற க்ரந்தம்தான் கர்னாடக ஸங்கீதத்திற்கு ஆதாரமானது. அதுபோல், நாரத மஹரிஷியின் ஸ்வர்ணார்னவம் என்ற க்ரந்தமும் ஆதாரமானதே. பஞ்ச த்ராவிட தேசங்கள் கர்னாடக ஸங்கீதத்திற்கு ஆதாரமான பூமி ஆகும்.

*கேள்வி : ஸம்ஸ்க்ருத பாஷையில்தான் பகவானை துதி செய்ய வேண்டும் என்றும், வேறு பாஷைகளில் பகவானை துதி செய்யக் கூடாது என்றெல்லாம் கூறுகின்றார்களே?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : ஒரு ராஜா, தன்னுடைய தர்பாரில் அமர்ந்திருக்கும் பொழுது அவனுடைய புத்ரனாக இருந்தாலும், ராஜாவிடம் மிகவும் மரியாதையாகத்தான் பேசுவார், பழகுவார். தனியாக ராஜாவும் அவருடைய புத்ரனும் இருந்தால் ஸஹஜமாக உரையாடிக்கொள்வார்கள். அதுபோல், பூஜை என்பது பகவானுக்கு மரியாதையுடன் செய்ய வேண்டுமானால் தேவ பாஷையில் செய்வது உசிதம். பகவானை கொஞ்ச வேண்டும் என்றால் ப்ரதேஶ பாஷையில் கொஞ்சி அனுபவிக்கலாம். இதுவும் ப்ரேம பூஜையாகும்.

*கேள்வி : பகவத்கீதையில் ஒரு ஸ்லோகத்தில், பகவான், ''அநேக ஜன்ம ஸம்ஸித்த: ததோ யாதி பராங்கதிம்'' என்கிறார். அதாவது பல ஜன்மாக்களுக்கு பிறகுதான் ஒருவனுக்கு ஸித்தி ஏற்படும் என்கிறார்.*

*ஆனால், மற்றொரு ஸ்லோகத்தில், ''தேஷாம் அஹம் ஸமுத்தார்த்தா ம்ருத்யுஸம்ஸாரஸாகராத் பவாபி நசிராத் பார்த்த மய்யாவேஷித சேதஸாம்'' என்கிறார். அதாவது ம்ருத்யு ஸம்ஸார ஸாகரத்திலிருந்து உடனே கரையேறுகின்றான் என்கிறார். இந்த இரண்டு ஸ்லோகங்களும் ஒன்றுக்கு ஒன்று முரண்பாடாக இல்லையா?*

ஸ்ரீ ஸ்வாமிகள் : முரண்பாடு இல்லை. அதிகாரி பேதத்தை பொறுத்தது இந்த விஷயம். எவர் தங்களுடைய ஸாதனை ஸாமர்த்தியத்தால் இறைவனை அடையமுடியும் என்று நினைக்கிறார்களோ, அவர்களுக்கு உடனே ஸித்தி ஏற்படுவதில்லை என்றும், அவர்களுக்கு பல ஜன்மங்களும் ஆகக்கூடும் என்பதே முதல் ஸ்லோகத்தின் பொருள். ஆனால், எவன் ஈஶ்வரனுடைய க்ருபையை மட்டுமே நம்பியுள்ளானோ, அவனுக்கு அந்த ஜன்மத்திலேயே ஸித்தி ஏற்பட்டுவிடும் என்பதே அடுத்ததின் பொருள்.

# வேத கதைகள் - 39

- தர்மஜ்ஞர், வாங்முக ஸார்வபௌம, மேலக்காவேரி
ப்ரஹ்மஸ்ரீ பஞ்சாபகேஶ ஶாஸ்த்ரிகள்

## ஆஶ்வின ஶஸ்த்ரத்தின் பெருமை

முன்பு ஒரு ஸமயம், ப்ரஜாபதியானவர் தன் பெண்ணை ஸோமராஜாவிற்கு மணம் முடிக்க நினைத்தார். அவள் உண்மையில் ஸூர்யனுடைய பெண். ஸூர்யா என்னும் பெயருள்ளவள். ஸூர்யனுடைய பெண்ணாக இருந்தாலும் ப்ரஜாபதிக்கு ஸூர்யாவிடம் அதிகமான பாசம் உள்ளதால் ப்ரஜாபதியின் பெண் என்று அழைக்கப்படுகிறாள்.

ஸூர்யாவை மணம் செய்துகொள்ள எல்லா தேவர்களும் வரன்களாக ஆகி ப்ரஜாபதியிடம் வந்தனர். அப்பொழுது, அந்தப் பெண்ணை மணக்க விரும்பியவர்கள் ஆஶ்வின ஶஸ்த்ரம் என்று கூறப்படுகிற ஆயிரம் ரிக்குகளை கன்யாஶுல்கமாக ஏற்படுத்தினர். அந்த ப்ரஜாபதியானவர், ''எந்த வரன் ஆஶ்வின ஶஸ்த்ர மந்திரங்களை பிறர் உதவி இல்லாமல் தான் ஒருவனாகவே படிக்கிறானோ அவனுக்கே என் பெண்ணை அளிப்பேன்'' என்று ப்ரதிஜ்ஞை செய்தார்.

அப்பொழுது ஆஶ்வின ஶஸ்த்ர விஷயத்தில், தேவர்கள் எந்தவிதமான தீர்மானமும் அற்றவர்களாக இருந்தனர். இந்த ஆஶ்வின ஶஸ்த்ரமானது என்னைத்தான் சார்ந்தது என்று ஒவ்வொருவரும் எண்ணினர். இவ்விதம் நிலையற்ற எண்ணங்களையுடைய தேவர்கள் பிறகு ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினர்.

''இந்த ஆஶ்வின ஶஸ்த்ரத்தை அடைவதின் பொருட்டு நாம் யாவரும் ஒரு ஓட்டப்பந்தயத்தை ஏற்படுத்துவோம். அந்த ஓட்டப் பந்தயத்தில் யார் ஜயிக்கிறார்களோ அவர்களையே இந்த ஆஶ்வின ஶஸ்த்ரம் சேரட்டும்'' என்று தீர்மானித்தனர். இவ்விதம் உடன்படிக்கையை ஏற்படுத்திய தேவர்கள், கார்ஹபத்யம் என்ற அக்னிக்கு மேல் விளங்குகின்ற ஸூர்யனை ஓட்டப்பந்தயத்தின் இலக்காக வைத்தனர். அதாவது, கார்ஹபத்யத்திலிருந்து ஸூர்ய மண்டலம் வரை ஓட வேண்டும். இதில் யார் வெற்றி பெறுகிறார்களோ அவருக்கு ஆஶ்வின ஶஸ்த்ரமானது சேரும் என்பதாகும்.

அப்பொழுது அக்னியானவர் அஶ்வதரீ என்ற குதிரைகள் பூட்டப்பட்ட ரதத்தில் ஏறி பந்தயத்தில் ஓடினார். குதிரைக்கும் கழுதைக்கும் உண்டானவைகள் அஶ்வதரீ எனப்படும். வேகமாக செல்வதற்காக அக்னியானவர் அந்த அஶ்வதரீகளின் பின்பாகத்தில் சுட்டார். அதனால் அஸ்வதரீகளுக்கு குட்டிபோடும் சக்தியானது நீங்கியது.

உஷா தேவதையானவர் கொஞ்சம் சிவப்பான காளைகள் கட்டப்பட்ட ரதத்தில் ஏறி பந்தயத்தில் ஓடினார். சிவப்பான காளை கட்டப்பட்ட ரதத்தில் ஏறி உஷா தேவதை ஓடியதால் இன்றும் உஷத் காலமானது சிவப்பாக இருக்கிறது.

பிறகு இந்திரன், குதிரை பூட்டிய ரதத்தில் ஏறி ஓடினார். அந்த ரதமானது உரக்க ஶப்தம் செய்தது. தேவர்களில் இந்திரன் க்ஷத்ரியன். ஆதலால்தான் க்ஷத்ரியன் வெளியில் கிளம்பும்பொழுது வீரர்கள் குதிரைகளில் ஏறி கோஷம் இடுகின்றனர்.

அஶ்வினீ தேவர்கள், கழுதை பூட்டிய ரதத்தில் ஏறி வேகமாகச் சென்று இலக்கை அடைந்தனர். அஶ்வினீ தேவர்களால் மிகவும் விரட்டப்பட்டதால் கழுதைகளுக்கு அதற்குப் பிறகு வேகமானது குறைந்துவிட்டது. ஆதலால்தான் வேகமாகச் செல்லும் ப்ராணிகளுள் கழுதைகள் மிகவும் குறைந்த வேகம் உள்ளவையாகவே உள்ளன. ஆனாலும் அஶ்வதரம், கழுதை என்ற இரு ஜாதிகளையும் உண்டு பண்ணுகிறது. அதனால் த்விரேதா: என்று அழைக்கப்படுகிறது.

இவ்விதம் ஓட்டப்பந்தயத்தில் அஶ்வினி தேவர்கள் ஜயித்ததால் இந்த ஶஸ்த்ரமானது ஆஶ்வின ஶஸ்திரம் என்று அழைக்கப்படுகிறது. இதுதான் ஆஶ்வின ஶஸ்த்ரத்தின் வரலாறு. ■

ஸ்ரீ ஹரி:

**ஸ்ரீ காமாக்ஷி ஸமேத ஸ்ரீ ஏகாம்பரேஶ்வரர் திருக்கோவில்**

பழைய கூடலூர்

23-7-2000 அன்று நம் ஸ்வாமிகள் ப்ரேரணையால் மும்பய் ஸ்ரீ ராமமூர்த்தி அவர்கள் முன்னிலையில் திருக்கோயில் திருப்பணிகளுக்கான பாலாலயம் காலை 9 மணியளவில் வேத, திருமறை பாராயணத்துடன் செய்யப்பட்டன. அன்று கிராம மக்கள் 1000 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

# *எந்தரோ மஹானுபாவுலு - 27*

அத்வைதாசார்யர், கௌர் ஸம்ப்ரதாயத்தின் ப்ரதான ஸ்தம்பம் எனக் கருதப்படுபவராவார். கௌராங்கருக்கு முன்பே தோன்றி கௌர்லீலைக்கு ஏற்ற அனுகூலமான ஒரு சூழ்நிலையை உருவாக்கி வைத்தவர். வயதிலும், வித்யையிலும், புத்தியிலும் கௌராங்கரைவிட மிகவும் வ்ருத்தரானாலும், கௌராங்கரின் சரண தூளியைத் தனது சிரஸ்ஸில் தரித்துக்கொள்வதை பெரும் பாக்கியமாகக் கருதியவர். இவரை, இளமையில் கமலாக்ஷர் என அழைப்பார்கள். கமலாக்ஷரின் தந்தையான தர்க்க பஞ்சானன் ந்யாய ஶாஸ்த்திரத்தில் இணையற்ற பண்டிதராக விளங்கினார்.

கமலாக்ஷர், இளமையிலேயே மிகவும் மேதாவியாகவும் வினய ஸம்பன்னராகவும் பகவத் பாராயணராகவும் திகழ்ந்தார். அவரது காலத்தில் வங்காளத்தில், தர்மத்தின் பெயரால் ப்ராணிகளை வதைத்து வந்தனர். கமலாக்ஷருக்கு இது மிகவும் வேதனையைத் தந்தது. ஒரு முறை அரசர் திவ்யஸிம்ஹர் கலந்துகொண்ட ஒரு விசேஷமான காளி பூஜையில் கமலாக்ஷரும் கலந்துகொண்டார். புகழ்பெற்ற பாடகர்கள் கீர்த்தனங்கள் பாடிக்கொண்டிருந்தனர். கமலாக்ஷர் காளி தேவியை வணங்காமல் ஸபையில் அமர்ந்துகொண்டதைக் கண்ட அரசர், பெரிய பண்டிதரின் புதல்வனான கமலாக்ஷர் இப்படி அதர்மமான செயலைச் செய்தது பற்றி வருந்தி அவரை அருகில் அழைத்து, ''கமலாக்ஷா, ஏன் தேவியை வணங்காமல் அமர்ந்துகொண்டாய்'' என வினவினார்.

கமலாக்ஷர் சிறிதும் பயமின்றி, ''தேவி, ஜகஜ்ஜனனியாக விளங்குபவள். எல்லாப் பிராணிகளும் அவளது குழந்தைகள். எந்த அன்னை தனது குழந்தைகளையே உண்கிறாளோ அவள் எப்படி அன்னை ஆவாள். அவள் ராக்ஷஸிதான். புத்ரன் வேண்டுமானால் துர்நடத்தை உள்ளவனாக இருக்கலாம். ஆனால் அன்னை ஒரு நாளும் கெட்டவளாக இருக்கவேமாட்டாள். ஒரே ஒரு ஸச்சிதானந்த பகவான்தான் பூஜைக்கும் வந்தனத்துக்கும் உரியவனாக இருக்கமுடியும். அவனை வணங்கினாலேயே அனைவரையும் வணங்குவதற்கு ஸமம். நீங்கள் இறைவனின் பெயரில் உங்களது இச்சைகளை பூர்த்தி செய்து கொள்கிறீர்கள்'' என துணிச்சலுடன் சொன்னார். சிறிய பாலகனது பயமில்லாத வசனங்களைக் கேட்டு அரசன் ஆச்சர்யமடைந்தான். இப்படி கமலாக்ஷர் இள வயதிலிருந்தே பயமின்றியும், தயாளுவாகவும், பரம வைஷ்ணவராகவும் இருந்தார்.

அத்யயனத்திற்காக ஶாந்திபுர் வந்து சேர்ந்து மிகப்பெரிய பண்டிதரானார். வித்யையினால் அவரது பக்தி **பா**வமும் ப்ரேமையும் விகசித்து மலர்ந்தது. எந்நேரமும் ஜீவர்களின் நன்மையைப் பற்றியே யோசிப்பார். பெற்றோரது மறைவுக்குப் பின்னர் இவர் பாரதத்தின் அனைத்து முக்கிய புண்ய தீர்த்தங்களுக்கும் சென்றார். ராமேஶ்வரம், சிவகாஞ்சி, மதுரா ஆகிய இடங்களில் சுற்றித்திரிந்து பகவான் மத்வாசார்யரின் ஆஶ்ரமம் வந்து சேர்ந்தார். அங்கு ஸ்ரீமான் மாதவேந்த்ரபுரி மஹராஜ் அப்பொழுது ஆசார்ய பீடத்திலிருந்தார். இவர்தான் முதன்முதலில் ஸன்யாஸிகளுக்கு பக்தி **பா**வத்தையும் மதுர உபாஸனையையும் ப்ரசாரம் செய்தவர். ஸ்ரீ ஈச்வரபுரி, ஸ்ரீ பரமானந்தபுரி, ஸ்ரீ ப்ரம்மானந்தபுரி, ஸ்ரீ ரங்கபுரி, ஸ்ரீ புண்டரீக வித்யாநிதி, ஸ்ரீ ரகுபதி உபாத்யாயர் ஆகியோர் இவரது விசேஷமான ஶிஷ்யர்களாவார்கள். இவர்களுள் ஸ்ரீ ஈச்வரபுரி, ஸ்ரீ மாதவேந்தபுரி மஹராஜின் முக்யமான அந்தரங்க ஶிஷ்யராவார். இந்த ஈஶ்வரபுரிதான் நமது கௌராங்கருக்கு தீக்ஷாகுருவாகும் பாக்யம் பெற்றவர்.

ஸ்ரீமாதவேந்த்ரபுரி, அத்வைதாசார்யரைக் கண்டு மிகவும் ப்ரஸன்னமடைந்தார். அவரது நடத்தை, வினயம், வித்யை, பக்தி, தேச பக்தி ஆகிய நற்பண்புகளைக் கண்டு ஸ்ரீ மாதவேந்த்ரபுரி புளகாங்கிதம் அடைந்தார். அவரை ஆலிங்கனம் செய்துகொண்டு ஸ்ரீ க்ருஷ்ண மந்திர தீக்ஷை அளித்து அவருக்குள் புதிய சக்தியை செலுத்தினார். குருதேவரிடம், அத்வைதாசார்யர், தேசத்தில் உண்மையான பக்தி வளரவேண்டும் என்ற தனது கவலையை தெரிவித்தார்.

அப்பொழுது குருதேவர், ''இந்த உலகை பகவான்தானே படைத்துள்ளார். தற்போது உள்ள துராசாரங்களையும் பக்தபயஹாரியான அவனால்தான் போக்க முடியும். பகவான் சீக்கிரமே தனது ஏதாவது ஒரு விசேஷ ரூபத்தில் அவதரித்து பக்தியை உத்தாரணம் செய்வான். நீ ஏன் கவலைப்படுகிறாய்?'' என்று சொன்னார். குருதேவரின் ஆஶ்வாச மொழிகளைக்கேட்டு அத்வைதாசார்யருக்கு பகவான் பக்தர்களைக் காக்க அவசியம் அவதரிப்பான் என விஶ்வாசம் ஏற்பட்டது. அவர் தனது குருவின் சரண தூளியை எடுத்து தலையில் தரித்துக்கொண்டு வ்ரஜ யாத்திரையை முடித்துக்கொண்டு ஶாந்திபுர் வந்தடைந்தார்.

அத்வைதாசார்யர் பெரிய தனவந்தராகவும் இருந்தார். இவரது தந்தைக்கு ராஜா திவ்யஸிம்ஹன் ஆஶ்ரயம் அளித்திருந்ததால் இவருக்கு ராஜ மான்யமும் நிரம்பி இருந்தது. இவரது பாண்டித்யத்தினாலும்

ஶாஸ்த்ரார்த்த நிபுணத்வத்தினாலும் அநேக பண்டிதர்களை இவர் வென்றார்.

ராஜாவுக்கும் இவர் மேல் விசேஷமான ப்ரீதி ஏற்பட்டது. ஶாக்தனாக இருந்த வயோதிக ராஜா இவரது பக்தி பூர்ணமான பாண்டித்யத்தைக் கண்டு தனது பஞ்சுபோல் நரைத்த தலையை இந்த இளம் ஆசார்யரது பாதங்களில் வைத்து நமஸ்கரித்தான். இவரது குணங்களைப் பற்றி கீர்த்தனங்கள் இயற்றி பாடலானான். அத்வைதாசார்யரின் குருதேவரான ஸ்ரீமாதவேந்த்ரபுரி கௌடதேச யாத்திரை மேற்கொண்டு ஶாந்திபூர் வந்தடைந்தார். சிறிது காலம் அத்வைதாசார்யருடன் சிறிது காலம் ஆனந்தமாக இருந்தார். பிறகு அவரை க்ரஹஸ்தாஶ்ரமத்தில் ஈடுபடச் சொல்லி ஆணையிட்டார். அதை சிரமேற்கொண்டு அத்வைதாசார்யர், க்ருஷ்ண பண்டிதர் என்பவரது சீதா, டாகுராணி என்ற இரண்டு பெண்களையும் மணந்து வாழ்க்கை நடத்தலானார்.

அத்வைதாசார்யருக்கு எந்நேரமும் க்ருஷ்ண பஜனம்தான் ப்ரியமான கார்யமாக இருந்தது. அவரிடம் பேத**பா**வமே இல்லாமல் இருந்ததால் ஜாதி மத வித்யாஸமில்லாமல் அவரிடம் சிஷ்யர்கள் இருந்தனர். ஹரிதாஸ் என்ற முகம்மதிய பாலகனின் க்ருஷ்ண பக்தியைக் கண்டு ஆசார்யர் அவனுக்கு வ்யாகரணம், கீதை, பாகவதம் முதலியவற்றை பாடமாக நடத்தினார். அவனை தனது புத்ரனாக **பா**வித்தார். இப்படி முகம்மதிய பாலகனை வீட்டில் வைத்திருப்பது தெரிந்து அனேக பண்டித ப்ராஹ்மணர்கள் இவரை விரோதித்துக் கொண்டனர். ஆனாலும் ஆசார்யர் அதைப் பற்றிக் கவலைப்படாமல் தனது வீட்டு ஶ்ரார்த்த அன்னத்தையும் ஹரிதாஸருக்கு அளித்தார்.

இவரைப் பண்டிதர்கள் தூஷித்தபொழுது, அவர் ''ஹரிதாஸுக்கு போஜனம் அளித்தால் கோடி ப்ராஹ்மண போஜனம் செய்வித்த பலனுண்டு என நான் நம்புகிறேன்'' என்றார். இவர் வெறும் வறட்டு பண்டிதர் மட்டுமில்லாமல் மிகவும் பெரிய விசாரவானாகவும் இருந்தார். மற்ற பண்டிதர்களைப் போல் புத்தகப்புழுவாகவும், வறட்டு தத்துவம் பேசுபவராகவும் இல்லாமல் ஶாஸ்த்ரப்படி வாழ்ந்து காட்டுபவராக இருந்தார். ஸதாகாலமும் ஹரிகீர்த்தனம் செய்வார். எப்பேர்ப்பட்ட உயர்ந்த ஔஷதத்தையும் மனதால் நினைத்துக்கொண்டால் வியாதி தீருமா? அதை உண்டால்தானே சோகம் தீரும். அது போல் ஶாஸ்த்ரத்தைப் படித்தால் மட்டும் போதாது. அதன்படி உணர்ந்து

நடைமுறையில் அனுசரித்தால்தான் இறைவனடியை அடையமுடியும் என்று உணர்ந்தவர் ஆசார்யர். இவரது பாடசாலையில் விசேஷமாக பக்தி ஶாஸ்த்ர சர்ச்சை நடக்கும்.

இவர் ஜகன்னாத மிச்ரா வீட்டிற்குச் சென்று 'புத்ரவானாவாய்' என ஆசீர்வாதம் செய்தவுடன் அவருக்கு முதலில் விஶ்வரூபர் பிறந்தார். பிறகு சசீமாதா மறுமுறை கர்ப்பம் தரித்தபொழுது பக்தியுடன் அத்வைதாசார்யரை வந்து வணங்கின ஸமயம், ''இந்த கர்ப்பத்திலிருந்து உனக்கு அவதார புருஷன் பிறப்பான்'' என ஆசீர்வாதம் செய்தார். அதன் பலனாக கௌராங்கர் அவதாரம் செய்தார்.

அத்வைதாச்சார்யரிடம், ஜகன்னாதமிச்ரா குடும்பத்தினர் மிகவும் ஸ்நேஹம் பூண்டிருந்தனர். மிச்ராஜி விச்வரூபனை அத்வைதாச்சார்யரிடம் ஒப்படைத்துவிட்டார். ஆசார்யரது பாடசாலையில் வ்யாகரண பாடங்களை வறட்டுத்தனமாக மனப்பாடம் செய்யும் வித்யார்த்திகளைவிட சாதுர்யமான பக்திபாவனை நிரம்பிய மாணாக்கர்களே அதிகம் இருந்தனர். விச்வரூபன் மிகவும் புத்திகூர்மையும் ஆசார்ய பக்தியும் நிரம்பியவனாக இருந்தான். மேலும் பாடசாலையில் நடக்கும் பக்தி தத்துவ ஞான ஆலோசனைகளை உன்னிப்பாக கவனித்து வந்ததால் மிகவும் விரக்தனாகவும் ஸத்குணவானாகவும் திகழ்ந்தான்.

நிமாயியின் ஜ்யேஷ்ட ப்ராதாவான விச்வரூபனும் ஸாதாரண பாலகன் இல்லை. பதினான்கு வயதிலேயே மிகவும் கம்பீரமான விசாரங்கள் உடையவனாக இருந்தான். தனது மாமாவின் பிள்ளையான லோகநாதனைத் தவிர்த்து, அவன் யாருடனும் அதிகமாகப் பேச மாட்டான். இருவரும் மணிக்கணக்கில் பரமார்த்திக விஷயங்களைப் பற்றியே சர்ச்சை செய்துகொண்டிருப்பார்கள். அவரது மனதில் ஸம்ஸார சுகங்களுக்கோ பந்த பாசத்திற்கோ துளியும் இடமில்லாமல் எந்நேரமும் பகவத் ஸ்மரணையும் ஞானவிசாரமும் தான் இருந்தது. அவரது மாதா பிதா அவருக்கு விவாஹம் செய்ய விரும்பி இதைப் பற்றி பிரஸ்தாபித்த பொழுது அவர் மிகவும் வேதனையுற்றார். அவர் மனம் ஸன்யாஸத்தையே மிகவும் விரும்பியது.

ஒரு குளிர்கால இரவில் அவர் வீட்டை துறந்து வெளியேற நிச்சயித்தார். ஒரு க்ஷணம் வயோதிக அன்னை, தந்தையும், மிகவும் இளவயதினனான நிமாயியையும் பார்த்துத் தடுமாறினார். பிறகு, ''நான் ஏன் இப்படி வருந்தவேண்டும். அண்ட சராசரத்தையும் ஸ்ருஷ்டித்து

ரக்ஷிக்கும் பகவான் அனைத்து ஜீவர்களின் போஷண பாரத்தை வஹிக்கிறான். அவனைக் கர்த்தாவாக நினைக்காமல் என்னை ஏன் கர்த்தாவாக நினைக்க வேண்டும்? நான் ஒரு கருவி மாத்திரம்தானே. எனவே நான் என் ஸங்கல்பத்திலிருந்து விலகக்கூடாது'' என த்ருட வைராக்யத்துடன் வீட்டை விட்டு வெளியேறினார். ஏற்கனவே பேசி நிச்சயித்து வைத்திருந்தபடி அவரது மாமாவின் புதல்வன் லோகநாதனும் கங்கைக்கரையில் இவருக்காக காத்திருந்தான். இருவருமாக சிறிதும் பயமோ உயிர்மீது ஆசையோ இன்றி கங்கையில் குதித்து நீந்தி கரையேறினர். மிகவும் குளிர்காலம். ஈர ஆடைகள், சீதோஷ்ண சிந்தையின்றி இரு இளைஞர்களும் ப்ரஹ்மவிசாரம் செய்ய புறப்பட்டு விட்டனர்.

இதற்குப் பிறகு இருவருடைய நிச்சயமான வ்ருத்தாந்தங்கள் ஏதும் விவரமாகத் தெரியவில்லை. பிற்காலத்தில் இவர் அரண்யர் என்னும் ஸன்யாசியிடம் தீக்ஷை பெற்று ஶங்கராரண்யர் என அழைக்கப்பட்டதாகத் தெரிய வந்தது. லோகநாதன் விச்வரூபனிடமே ஸன்யாஸ ஆஶ்ரமம் ஸ்வீகரித்துக்கொண்டார் எனவும் தெரிய வந்தது. கடைசியில் இவர் மஹாராஷ்ட்ர தேசத்து பிரஸித்தி பெற்ற பண்டரீபுர க்ஷேத்திரத்தில் தனது பாஞ்ச பௌதிக சரீரத்தைத் தியாகம் செய்தார். சரீர த்யாகம் செய்யும் முன்பு ஸ்ரீ மாதவேந்த்ரபுரி ஆஶ்ரமத்தில் அவரது பரமபிரியமான சிஷ்யரான ஸ்ரீ ஈச்வரபுரியிடத்தில் தனது ஸகல தேஜஸையும் ப்ரயோகித்துவிட்டுச் சென்றார். அவரிடமிருந்து இந்த தேஜஸ் நித்யானந்தரிடம் அடைந்தது. இந்த நித்யானந்தர்தான் ஸ்ரீபலராமனது அவதாரமாக கொண்டாடப்படுகிறார். இவரைப் பற்றி நாம் கௌராங்கரது பிற்கால சரித்ரத்தில் மறுபடியும் படிக்கப் போகிறோம்.

இங்கு நவத்வீபத்தில் காலை விடிந்ததும் விச்வரூபனை படுக்கையில் காணாமல் அனைவரும் தேடலானார்கள். கங்கைக்கு இவ்வளவு சீக்கிரம் ஸ்னானத்துக்கும் சென்றிருக்கமாட்டானே, ஏனென்றால், ஜலபாத்திரம், வஸ்த்ரம் எல்லாம் அருகிலேயே உள்ளதே என கவலை அடைந்து அக்கம்பக்கம் எல்லாம் சென்று விசாரிக்கலானார்கள். லோகநாதனையும் காணாமல் இரு குடும்பத்தினரும் சோகத்தில் மூழ்கினார்கள்.

க்ஷணத்தில் ஊர்முழுவதும் இரு இளைஞர்களும் வீட்டைத் துறந்து சென்ற விஷயம் பரவிற்று. மிச்ராவின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகிய வண்ணமிருந்தது. சசீதேவியின் கதறலைக் கேட்டால் கல்லும் கரைந்து விடும் போலிருந்தது. ''இப்படி வயதான அன்னை தந்தையை விட்டுச்

சென்றுவிட்டாயே விச்வரூபா என கதறினாள். அன்னையின் அழுகையைக் கேட்டு நிமாயியும் உரக்கக் கதறி அழுது மூர்ச்சையானான். அக்கம்பக்கத்து ஜனங்கள் தண்ணீர் தெளித்து நிமாயியை சுயநினைவுக்குக் கொண்டு வர முயற்சித்தனர். சிறிது நேரத்தில் ப்ரஜ்ஞை அடைந்த நிமாயி, அன்னையின் கண்ணீரைத் துடைத்துவிட்டு, அம்மா, அண்ணன் சென்று விட்டால் என்ன? கவலைப்படாதே! நான் பெரியவனாகி உங்கள் இருவருக்கும் ஸேவை செய்து காப்பாற்றுவேன்! தைரியமாக இருங்கள்'' என்று ஸமாதானம் செய்தான்.

ஜனங்கள் மறுபடியும் விச்வரூபனையும் லோகநாதனையும் கங்கைக்கரையைத் தாண்டித் தேடலாம் என்று புறப்பட்டனர். மிச்ராஜி தைர்யமாக, ''விச்வரூபன் சிறு குழந்தையா என்ன? அவனுக்கு இப்படி துறவு வாழ்வுதான் இஷ்டம் என்றால் பகவான் அவனது இஷ்டத்தைப் பூர்த்தி செய்யட்டும். அவனுக்கு ஸன்யாஸத்தில் சுகமிருக்கும் என்றால் ஸன்யாஸியாக வாழட்டும். எல்லோரும் அவன் ஸன்யாஸியாக இருந்து அந்த தர்மத்தை நன்றாக பாலனம் செய்யட்டும் என்று பகவானிடம் ப்ரார்த்தனை செய்துகொள்ளுங்கள். அவன் ஸன்யாஸியான பிறகு வீட்டுக்குத் திரும்பி வராமல் இருக்கவேண்டும் என ஆண்டவனிடம் வேண்டிக்கொள்ளுங்கள்'' என்றார். மிச்ராஜியின் இப்படிப்பட்ட வசனங்களைக் கேட்டு அனைவரும் ஆனந்தமடைந்தனர். இப்படிப்பட்ட பண்டிதரின் உன்னத குணங்களைப் போற்றிக்கொண்டே அனைவரும் வீடு திரும்பினர்.

விச்வரூபனின் துறவுக்குப் பிறகு மிச்ராஜி அவனது வித்யையால் தான் அவன் இப்படி துறவறத்தை அடைந்தான் என நினைத்து நிமாயியை பாடசாலைக்கு அனுப்பவே இல்லை. நிமாயியும் தந்தையின் ஆணையை மேற்கொண்டு பாடசாலைக்குச் செல்லாமல் பழையபடி தனது விளையாட்டுக்களைத் தொடர ஆரம்பித்துவிட்டான். மறுபடியும் புகார்கள் வர ஆரம்பித்தன. தந்தை நிமாயியை விசாரித்தபொழுது அவன் ''நான் என்ன செய்யட்டும். பாடசாலைக்கு செல்லாவிட்டால் என்னொத்த பாலகர்களோடு விளையாடத்தானே வேண்டும். வீட்டில் சும்மா எப்படி உட்காருவதாம்?'' என்றான். தந்தை மௌனமானார்.

ஒரு நாள் நிமாயி, கந்தல் ஆடைகளை அணிந்து, தன் கண்களைக் கட்டிக்கொண்டு குருட்டுப் பிச்சைக்காரனைப் போல் கையைத் தட்டிக் கொண்டு, 'குருடனுக்கு பிச்சை போடுங்கள் அம்மா, ஆண்டவன் உங்களுக்கு நன்மையளிப்பான்' என்று வீடுவீடாகப் போக ஆரம்பித்தான்.

அன்னை பொறுக்கமாட்டாமல், நிமாயி இதென்ன வேஷம்? ப்ராஹ்மண பாலகன் இப்படி பிச்சைக்கார வேஷம் போடலாமா? உனக்கு வீட்டில் என்ன குறைவு? என்று கண்டிக்க, நிமாயி, ''ஏழை ப்ராஹ்மணனின் மூர்க்க புத்திரன் குருடன்தான் அம்மா. படிப்பறிவில்லாதவனும் குருடன்தான். நீங்கள் என்னை படிக்கவேண்டாம் என்று சொல்லிவிட்டீர்களே. அதனால்தான் இப்படி நான் பிச்சை எடுக்கிறேன்'' என்றான். இப்படி தினமும் புதிது புதிதாக உபத்ரவங்கள் செய்தான் நிமாயி.

கடைசியில் அன்னை, மிச்ராஜியிடம் வந்து, ''நிமாயி பாடசாலைக்குச் சென்று படிக்கட்டும். படித்தவர்கள் அனைவரும் ஸன்யாஸிகளாக ஆகி விடுகிறார்களா என்ன? ஊரில் ஆயிரக்கணக்கான பண்டிதர்களும் வித்யார்த்திகளும் இருக்கிறார்கள். இவர்களுள் யாராவது ஸன்யாஸியாக ஆனார்களா என்ன? இதெல்லாம் விதிதான். இவனது தலையில் ஸன்யாஸம் விதித்திருந்தால் நம்மால் தடுத்து நிறுத்தமுடியுமா? ப்ராஹ்மண பையன் மூர்க்கனாக இருப்பது சரியில்லை'' என்று சொன்னதும் மிச்ராஜி அவனை பாடசாலைக்கு அனுப்ப ஸம்மதித்தார்.

நிமாயி தனது குறும்புகளை விட்டொழித்து பாடசாலைக்குச் சென்று ஒழுங்காக படிக்கலானார். ஒரு நாள் நிமாயி, நைவேத்யம் வைத்திருந்த இலையையே சாப்பிட்டுவிட்டு மூர்ச்சையானார். மூர்ச்சை தெளிந்தபிறகு அன்னையிடம் நிமாயி பேசலானார் - ''அம்மா, இப்பொழுது விச்வரூபன் என்னிடம் வந்து நீயும் ஸன்யாஸியாக ஆகிவிடு என்று சொன்னார். நான் சின்ன பையன், எனக்கு ஸன்யாஸத்தைப் பற்றி என்ன தெரியும்? நான் என்னுடைய வயதான அன்னை, தந்தைக்கு ஸேவை செய்யவேண்டும் என்று சொன்னதும், விச்வரூபன், அப்படியானால் சரி அன்னை தந்தைக்கு எனது ப்ரணாமங்களை சொல். நான் வருகிறேன் என்று சொன்னார்.''

இப்படி நிமாயி சொன்னதும் சசீமாதா அவனைக் கட்டிக்கொண்டு கண்ணீர் பெருக்கிக் கொண்டு, ''நிமாயி! நீதான் எங்களுக்கு ஒரே ஒரு கொழுகொம்பு. இந்த வயதான தம்பதிகளை விச்வரூபன் போல் தவிக்க விட்டு எங்கும் செல்லாதே'' என்று சொல்லி நிமாயியை அனைத்துக் கொண்டாள்.

இப்படியாக நிமாயிக்கு 9 வயது ஆகிவிட்டது. தந்தை அவனுக்கு யஜ்ஞோபவீதத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யத் துவங்கினார்.

(தொடரும்)

**- ஜயந்தி ஜானகிராமன்**

ஸ்ரீ ஹரி:

பூஜ்யஸ்ரீ முரளீதர ஸ்வாமிகளின்
சைதன்ய மஹாப்ரபு நாமபிக்ஷா கேந்த்ரா
ப்ரேமிகபவனம், 24, நேதாஜி நகர்,
ஜாபர்கான்பேட்டை, சென்னை - 600 083.

நம் ஸ்வாமிகளின் ஆஜ்ஞையின் பேரில் ''ஹரே ராம...'' நாம ஸங்கீர்த்தனம் கீழ்க்கண்ட பள்ளிகளிலும் இறைவணக்கத்தில் நடை பெற்றுக்கொண்டு வருகின்றது.

**1. Vivekananda Education Trust Schools**

(i) Smt. Krishna Moolchand Maheswari Vivekananda Vidyalaya - Thiruninravur.
(ii) Smt. Ganga Devi Bajranglal Chokhani Vivekananda Vidyalaya - Mudichur.
(iii) Smt. Samjuben Kapurchand Parekh Vivekananda Vidyalaya - Manali.
(iv) Shri. S. Badalchand Sugankavar Chordia Vivekananda Vidyalaya - Mudichur
(v) Vivekananda Vidyalaya - Attipattu.

**2. Vivekananda Educational Society**

(i) Sri. Ram Khemka Vivekananda Vidyalaya Jr. College - Thiruvotriyur.
(ii) Smt. Kasturba Nimchand Shah Muthyalu Chetty Vivekananda Vidyalaya - Perambur.
(iii) Smt. Ramkumar Devi Fornra Vivekananda Vidyalaya College-Chromepet.
(iv) Smt. Narbada Devi, J. Agarwal Vivekananda Vidyalaya, Jr. College - Vyasarpadi.
(v) Dr. Nalli Kuppuswamy Vivekananda Vidyalaya Jr. College - Korattur.
(vi) G.K. Shetty Vivekananda Vidyalaya Jr. College - Ambattur West.
(vii) G.R. Thangamaligai Mahalakshmi Vivekananda Vidyalaya - Manali New Town.
(viii) Vivekananda Vidyalaya - Veerapuran, Chennai - 600 055.
(ix) Vivekananda Vidyalaya - Ennore.
(x) Vivekananda Vidyalaya - Chitlapakkam
(xi) Vivekananda Vidyalaya (near) Nazarathpet.

ஸ்ரீ ஹரி:

*ஓம் நமோ பகவதே வாஸுதேவாய*
*ஸ்ரீராதாக்ருஷ்ணபரப்ரஹ்மணே நம:*

*யஸ்ய பாதராவிந்தஸ்த துளஸீகந்த யோஹிதா: ।*
*ஸநகாதி மஹாந்தோSபி வாஸுதேவ: பரஸ்வர: ॥*
*த்யக்த்வா ஸ்வதாம வைகுண்டம் லோகானுக்ரஹவாஞ்சயா ।*
*அவதாராணி ய: சக்ரே வாஸுதேவ: பரேஸ்வர: ॥*

குருஜி ஸ்ரீ முரளீதரஸ்வாமிகள் மிஷன்
சென்னை - 600 083.

**ஸ்ரீ மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ஏழாவது வருட ப்ரஹ்மோத்ஸவம்.**

இடம் : மதுரபுரி தேதி : 22.08.2000 முதல் 01.09.2000 வரை

Note : மதுரபுரி என்பது ஆஶ்ரமத்தின் பெயர்.
தாம்பரம் to ஸ்ரீ பெரும்புதூர் மார்க்கத்தில்
மலைப்பட்டு என்ற இடத்தில் இறங்கி வரவேண்டும்.

பஸ் நம்பர் : (தாம்பரம் - ஸ்ரீ பெரும்புதூர்)
55S, 55N மற்றும் பாரதி Transport வேல்முருகன் Transport.

நிகழும் விக்ரம வருஷம், ஆவணி மாதம் 6-ந் தேதி (22-8-2000) செவ்வாய்க்கிழமை கோகுலாஷ்டமி சுபதினத்தில் ஆரம்பித்து ஸ்ரீ மாதுரிஸகீ ஸமேத ஸ்ரீ ப்ரேமிகவரதனின் ப்ரஹ்மோத்ஸவம் மதுரபுரியில் நடக்க இருக்கின்றபடியால் பாகவதோத்தமர்கள் அனைவரும் இதில் கலந்து கொண்டு ஸ்ரீ க்ருஷ்ண பரமாத்மாவின் க்ருபைக்கு பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- Trsustees

## நிகழ்ச்சிநிரல்

| | | | | |
|---|---|---|---|---|
| 22-08-2000 | செவ்வாய் | மாலை | - | ஹம்ஸவாஹனம் |
| | | இரவு | - | நந்தோத்ஸவம் |
| 23-08-2000 | புதன் | மாலை | - | சேஷவாஹனம் |
| 24-08-2000 | வியாழன் | மாலை | - | ஸிம்ஹவாஹனம் |
| 25-08-2000 | வெள்ளி - ஏகாதஸீ | காலை | - | கருடவாஹனம் |
| | | மாலை | - | புஷ்பபல்லக்கு |
| 26-08-2000 | சனி - த்வாதஸீ | காலை | - | கோவிந்த பட்டாபிஷேகம் |
| | | மாலை | - | யானை வாஹனம் |
| 27-08-2000 | ஞாயிறு | மாலை | - | நிகுஞ்ஜோத்ஸவம் |
| | | இரவு 7.00 ஸங்கீத கச்சேரி by ஸ்ரீ ஸ்ரீராம்பார்த்தஸாரதி | | |
| 28-08-2000 | திங்கள் | மாலை | - | புன்னைமரவாஹனம் |
| 29-08-2000 | செவ்வாய் | மாலை | - | குதிரைவாஹனம் |
| 30-08-2000 | புதன் | மாலை | - | ஜானவாஸம் |
| | | நாதஸ்வரம் : கடலூர் பாலசந்தர் & பாலமுருகன் | | |
| 31-08-2000 | வியாழன் | காலை | - | ராதா கல்யாணம் |
| | | மாலை | - | தெப்பம் |
| 01-09-2000 | வெள்ளி | காலை | - | விடையாற்றி |

தினமும் மாலையில் ப்ரவசனமும்
இரவில் திவ்யநாமகீர்த்தனமும் நடைபெறும்.

## பிழை திருத்தம்

சென்ற இதழில், ஜ்யோதிஷம் - 5ல் கீழ்கண்ட பிழைதிருத்தம் ஏற்பட்டுள்ளது என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

| பிழை | திருத்தம் |
|---|---|
| ''கருடபக்ஷி கத்துவதைக் கேட்பது'' கெட்ட ஸகுனம் | ''கருட பக்ஷி கத்துவதைக் கேட்பது'' நல்ல ஸகுனம் |

அதாவது, ''கழுதை கத்துவதைக் கேட்பது'' நல்ல ஸகுனம்

''கழுதையைப் பார்ப்பது'' கெட்ட ஸகுனம்.

''நரி ஊளையிடுவதை கேட்பது'' கெட்ட ஸகுனம்,

''நரியைப் பார்ப்பது நல்ல ஸகுனம்''.

''கருட பக்ஷி கத்துவதைக் கேட்பதும்'' நல்ல ஸகுனம்.

''கருட பக்ஷியைப் பார்ப்பதும்'' நல்ல ஸகுனம்.

''ஆந்தை கத்துவதைக் கேட்பதும்'' கெட்ட ஸகுனம்.

''ஆந்தையைப் பார்ப்பதும்'' கெட்ட ஸகுனம் என்று கூறுவார்கள்.

## அறிவிப்பு

1. ஸந்தாதாரர்கள் தங்களுடைய முகவரியில் ஏற்படும் மாறுதலை நமது மிஷனுக்கு உடனே தெரிவிக்க வேண்டுகிறோம். அப்பொழுதுதான் ''மதுரமுரளியை'' சரியான முகவரிக்கு அனுப்ப இயலும்.
2. ஸந்தாதாரர்கள் அனைவரும் தங்களுடைய சரியான முழு முகவரியையும், தொலைபேசி எண் முதலியவற்றை ஒரு கார்டில் எழுதி மிஷனுக்கு அனுப்ப வேண்டுகிறோம். அங்ஙனம் அனுப்பும் கார்டில் / கவரில் ''மதுரமுரளி'' என்று எழுதி அனுப்பவும்.

அனுப்ப வேண்டிய முகவரி:

| | |
|---|---|
| குருஜி ஸ்ரீ முரளீதர ஸ்வாமிகள் மிஷன்<br>24, நேதாஜி நகர், ஜாபர்கான் பேட்டை<br>சென்னை - 600 083. | திரு. V. சங்கரன், மதுரமுரளி,<br>5/3, MIG Flats, பி.டி. ராஜன் சாலை,<br>கே.கே.நகர், சென்னை - 600 078.<br>Phone : 4714327 |

# ஜோதிஷம் - 6

- ஸ்ரீ ஸ்வாமிகள்

ஸகுனத்தை பார்த்தே பலன்களைத் துல்லியமாக கூறுபவர்கள் இருந்திருக்கின்றார்கள். ஆனால், அவர்களிடம் ஒரு உபாஸனை பலமும் சேர்ந்து இருக்கும் என்பதை மறுக்கமுடியாது. இந்த ஸகுனத்தைக் கொண்டு ஒரு கார்யத்தில் நமக்கு ஜயம் ஏற்படுமா அல்லது ஏற்படாதா என்பவற்றை மட்டுமே சரியாகக் கூற முடியுமே தவிர, எப்பொழுது ஏற்படும், எதன் மூலமாக ஏற்படும் என்றெல்லாம் துல்லியமாகக் கூற முடியாது. ஒரு அனுமானமாக வேண்டுமானால் கூறலாம்.

உதாரணமாகக் கூற வேண்டும் என்றால் இது மாதிரி ஸகுனத்தை பார்த்து பலன் கூறும் ஒருவர் ஒரு ரயில் நிலையத்தில் நிற்பதாக வைத்துக் கொள்வோம். அப்பொழுது ஒருவன் அவரிடம் தான் எழுதியுள்ள தேர்வில் வெற்றி கிடைக்குமா என்று வினவுகின்றான். உடனே சிவப்பு விளக்கு மாறி, ரயில் வருவதற்கான அறிகுறியைக் காட்டும் பச்சை விளக்கு எரிகிறது. அதை ஒரு ஸகுனமாக எடுத்துக்கொண்ட அவர், அவன் தேர்வில் வெற்றி பெற்றுவிடுவான் என்று கூறுகிறார். அது போல் நிகழ்ந்தும் விடும். இவர் ரயில் நிலையத்தில் நின்றுகொண்டிருந்த விஷயத்தையும், ஒரு பையன் அவரிடம் தேர்வு முடிவு பற்றி கேட்டதையும், பச்சை விளக்கு மாறியதையும், அதைக்கொண்டு அவர் அந்தப் பையன் தேர்வில் வெற்றி பெற்றுவிடுவான் என்று கூறியதையும் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த ஒருவர் கவனித்துக் கொண்டிருந்ததாக வைத்துக் கொள்வோம்.

மற்றொரு ஸமயம், இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அந்த நபர் அதே மாதிரி ரயில் நிலையத்தில் நிற்கும்பொழுது, யாரோ ஒருவர் அவரிடம் மனக்கஷ்டத்துடன் தான் தேர்வு எழுதியதில் வெற்றி பெறுவேனோ என்று கவலையுடன் கேட்கிறார். அப்பொழுதும் சிவப்பு விளக்கு மாறி பச்சை விளக்கு எரிந்து ரயில் வரும் அறிகுறியை தெரிவிக்கிறது. முன்னர் தான் பார்த்து வைத்த நிகழ்ச்சியை ஞாபகத்தில் கொண்டு அவர், இதே போல் தேர்வு முடிவுக்காக அந்த ஸமயத்தில் ஒருவர் கேட்க, அந்த ஸகுனாரூடத்தில் பயிற்சி பெற்றவர் உடனே பச்சை விளக்கு எரிந்ததினால் தேர்வு பெற்றுவிடுவான் என்று சொன்னார். இப்பொழுதும் அதே போல் நடக்கிறது. ஆகையால் அவன் தேர்வு

பெறுவான் என்று முடிவு செய்து, அவ்வாறே பலனும் கூறுகிறார். ஆனால், அந்த பையனோ அந்த தேர்வில் தோல்வி அடைந்துவிடுகிறான்.

இந்த ஸகுனாரூடம் என்பது, ஸகுனாரூடத்துடன் பழக்கப் பட்டவர்களுக்கே சரிப்படுமே தவிர, மற்றவர்களுக்கு வராது. உதாரணமாக ஓவியம் நன்றாக வரைந்து பழக்கப்பட்டவர்களுக்கே ஓவியம் நன்கு வரைய வரும். ஸங்கீதத்தில் நன்கு தேர்ச்சி பெற்றவரே நன்கு பாடமுடியும். அது போல் ஸகுனாரூடத்தில் நன்கு பயிற்சி கொண்டவர்களே ஸகுனாரூடத்தை நன்கு சொல்லமுடியும்.

ஒரு ஸமயம், ஸகுனாரூடத்தில் மேதையான ஒரு குரு, தன்னுடைய சீடர்களுக்குப் பாடம் நடத்தி வந்தார். அப்பொழுது ஒரு நபர், ''நானும் என்னுடைய மனைவியும் பிரிந்திருக்கிறோம், மீண்டும் சேர்ந்து வாழ்வோமோ என்று வினவினார். அத்தருணத்தில் குருநாதரின் பத்தினி, கிணற்றிலிருந்து நீர் இறைத்துக்கொண்டிருந்ததாகவும், வடம் அறுந்து குடம் கிணற்றில் விழுந்து விட்டதாகவும் தெரிவித்தார். இதை ஒரு ஸகுனமாக எடுத்துக்கொண்டு, அந்த குருநாதர் தனது சீடர்களைப் பார்த்து, ''அவர்கள் தம்பதிகளாய் மறுபடியும் சேர்ந்து வாழ்வார்களா மாட்டார்களா'' என்று பலன் கூறச் சொன்னார். அவர்கள் அனைவரும் கலந்தாலோசித்து திருமங்கல்ய சரடு போன்றதுதான் வடம். எப்பொழுது அது அறுந்து விட்டதோ மீண்டும் அவர்கள் சேரமாட்டார்கள் என்று கூறிவிட்டனர். ஆனால் குருநாதரோ அவர்களைப் பார்த்து நீங்கள் மீண்டும் சேருவீர்கள் என்று கூறி அனுப்பினார்.

சில நாட்கள் கழித்து அந்த நபரும் தன் மனைவியுடன் சேர்ந்து வந்து ஸேவித்து நீங்கள் கூறியது போல் நாங்களிருவரும் மறுபடி சேர்ந்துவிட்டோம் என்று ஸந்தோஷத்துடன் கூறினார். அவர்கள் சென்றவுடன், சீடர்கள் குருநாதரைப் பார்த்து எந்த ஒரு ஸகுனத்தை வைத்து பலனை தீர்மானித்தீர்கள்? எப்படி இவ்வாறு நடந்தது? என்று கேட்டனர். அதற்கு குருநாதர் நானும் அதே ஸகுனத்தை வைத்துக் கொண்டுதான் பலன் கூறினேன் என்று மேலும் விவரிக்கலானார். நீங்கள் எல்லாம் அந்த தாம்புக்கயிறு அறுந்துவிட்டதால் இந்த திருமண உறவு முறிந்து விடும் என்று முடிவு செய்து பலன் கூறினீர்கள். ஆனால், நான் எப்படிப் பார்த்தேன் என்றால் கிணற்றில் உள்ள தண்ணீரென்ற குடும்பத்தில் இருந்து, குடம், சிறிது நீரைப் பிரித்து இருந்தது. எப்பொழுது தாம்புக்கயிறு அறுந்து விட்டதோ, அப்பொழுது பிரிந்து இருந்த நீரும் குடும்பத்துடன் சேர்ந்து விட்டது. ஆகவே இவர்களிருவரும் சேருவார்கள் என்று பலன் கூறினேன். அதுபடியே நடந்தது என்றார்.

அதனால் ஸகுனத்தை வைத்துப் பலன் சொல்லும்பொழுது, விஷயங்களை ஊடுருவி பலன் சொல்லும் ஒரு தனி ஸாமர்த்தியம் தேவை. இன்றும் இது மாதிரி பலன் சொல்பவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். அது போல் ஒருவர் கேட்ட கேள்விக்கு ப்ரஶ்னம் பார்த்து பலன்கள் சொல்ல முடியும். ப்ரஶ்னத்தில் தேவ ப்ரஶ்னம் என்றும், மனுஷ்ய ப்ரஶ்னம் என்றும் இரண்டு உண்டு. தேவ ப்ரஶ்னத்தில், ஓரிடத்தில் கோவிலை நிர்மாணிக்கலாமா, கூடாதா, கோவிலில் எந்த ஸ்வாமியை ப்ரதிஷ்டை செய்யவேண்டும், அந்த பூமியில் உள்ள விசேஷமான தன்மைகள் எவை, இவை பற்றிக் கூற முடியும். மேலும் ஒரு கோவிலுக்கு ஸான்னித்யம் உள்ளதா, குறைந்துள்ளதா, ஸான்னித்யம் குறைந்திருந்தால் அதற்கு என்ன பரிகாரம், அல்லது அந்த மூர்த்தி ஶாந்தமாக உள்ளதா, உக்ரமாக உள்ளதா, அங்கு செய்யப்படும் ஆராதனங்கள் நைவேதனங்கள் எல்லாம் போதுமானதாக உள்ளதா என்றெல்லாம் தேவ ப்ரஶ்னத்தில் விஸ்தாரமாகக் கூற முடியும். ஸாதாரணமாக தேவ ப்ரஶ்னங்கள் பார்ப்பவர்கள் மனுஷ்ய ப்ரஶ்னம் பார்க்க மாட்டார்கள். இவைகளை அஷ்ட மங்கல ப்ரஶ்னம் என்று கூறுவதுண்டு.

தெய்வத்தால் ப்ரேரணை செய்யப்பட்ட ஒருவனே இத்தகைய ஒரு தெய்வக்ஞனை அணுக முடியும் என்று ஜோதிஷ ஶாஸ்திரம் கூறுகிறது. மேலும் நாம் உபாஸிக்கும் எந்த தெய்வமும் நம்முடைய ஸாமான்ய கண்களுக்கு தெரிவதில்லை. ஆனால் ஜோதிஷ ஶாஸ்திரத்தில் கூறப்பட்டுள்ளதான தெய்வங்களான நவக்ரஹங்கள் அனைத்தும் கண்களுக்கு புலப்படக் கூடியவை. அதுவே அந்த ஶாஸ்திரத்திற்கு ஒரு பெருமை. ஒருவன் அஷ்டமங்கல ப்ரஶ்னம் பார்க்க ஒரு தாம்பூலம் வைத்து அந்த தெய்வஜ்ஞனை அழைக்கவேண்டும். அவன் அழைக்கும் நேரம், அழைப்பவனுடைய ஒரு செய்கை, அவன் சொல்லும் வார்த்தை, அழைக்கும் காலம், கொடுக்கும் வெற்றிலையின் எண்ணிக்கை போன்ற பல விஷயங்களை கணக்கில் எடுத்துக்கொண்டே அஷ்டமங்கல ப்ரஶ்னம் பார்க்கப்படுகின்றது. இந்த ப்ரஶ்னம் பார்த்து முடிக்க ஸமயத்தில் ஒரு வாரம், ஒரு மாதம் கூட ஆகும். பல ஜோதிடர்கள் ஒரே ஸமயத்தில் உட்கார்ந்து விவாதித்து ஒரு முடிவுக்கு வருவார்கள். ஒரு தெய்வஜ்ஞனுடைய மனதில் எப்பொழுதும் ஜோதிஷ ஶாஸ்திரத்தைப் பற்றிய சிந்தனையும், ஏகாக்கிர சித்தமும் இருந்தால்தான் அந்த ஶாஸ்திரத்தில் அவனால் வெற்றி பெற முடியும்.

(தொடரும்)

# பாலகர்களுக்கு ஒரு கதை - 33

ஒரு ஸமயம், தர்மபுத்ரர் தன்னுடைய நகரமான இந்த்ரப்ரஸ்தத்தில் ராஜஸூய யாகம் நடத்தினார். விமரிசையாக நடந்த அந்த யாகத்தில் பல ரிஷிகள் கலந்துகொண்டனர். பல தேசத்து அரசர்களும் கலந்து கொண்டனர். அந்த நகரமே கோலாகலமாக இருந்தது. அந்த யாகத்தில் பீமன் ஸமையலைக் கவனித்துக்கொண்டான். துரியோதனன் கஜானாவை கவனித்துக்கொண்டான். ஸஹதேவன் பூஜையையும் நகுலன் த்ரவ்யங்களை வாங்குவதையும் கவனித்துக்கொண்டார்கள்.



அர்ஜுனன் குரு கைங்கர்யத்தைச் செய்தான். பகவானாகிய க்ருஷ்ணன் ஸாதுக்களுக்கு பாதஸேவை செய்தார். பரிமாறுவதை த்ரௌபதி கவனித்துக்கொண்டாள். கர்ணன் அந்த யாகத்தில் த்ரவ்யங்களை தானம் செய்தான். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பொறுப்பை எடுத்துக்கொள்ள, யாகம் சிறப்பாக நடந்து முடிந்தது.

யாகம் முடிந்தவுடன் அனைவரும் தங்களுடைய இருப்பிடத்திற்குச் சென்றனர். ஸ்ரீக்ருஷ்ணன், துரியோதனன் போன்றவர்கள் தர்மபுத்ரருடைய அரண்மனையிலேயே சிலநாட்கள் தங்கினர். அப்பொழுது துரியோதனன் தர்மபுத்ரருடைய அரண்மனையில் உள்ள ஐஶ்வர்யத்தை பார்த்து மிகவும் பொறாமைகொண்டான். அந்த அரண்மனையானது ‘மயன்’ என்கிற மாயாவியினால் கட்டப்பட்டதாகும்.

அந்த மாளிகையில் உள்ள ஒவ்வொரு பொருளும் தேவர்களுடைய ஐஶ்வர்யத்தையும் மிஞ்சுவதாக இருந்தது. வைரமயமான தூண்கள், தங்கமயமான சுவர்கள், பெரிய மாளிகைகள் மற்றும் பலவிதமான அதிசயங்களைக் கொண்டதாகவும் இருந்தது. அந்த மாளிகையைக் கட்டிய மயன் பெரிய மாயாவியாதலால் தரையைத் தண்ணீரைப் போலச் ஶ்ருஷ்டித்தான். தண்ணீரை தரையைப் போலச் செய்தான். மேலும் பல அதிசயங்களுடன் அந்த அரண்மனையை நிர்மாணித்திருந்தான்.

ஒரு ஸமயம், துரியோதனன் அந்த அரண்மனையைச் சுற்றிப் பார்ப்பதற்காகச் சென்றான். ஒரு இடத்தில் தண்ணீர் என்று நினைத்து மிகுந்த ஜாக்ரதையுடன் சென்றான். ஆனால், அந்த இடமோ பளிங்குக் கற்களாலான தரை. துரியோதனனுக்குப் பிறகுதான் புரிந்தது அது தரையென்று. மற்றொரு இடத்தில் தரையென்று நினைத்துச் சென்றவன் தண்ணீரில் விழுந்தான். அவன் விழுவதை மாடியிலிருந்து பார்த்த த்ரௌபதி பரிஹஸித்துச் சிரித்தாள்.

அவளுடைய அந்த பரிஹாஸத்தினால் அவமானம் அடைந்த துரியோதனன், த்ரௌபதியைப் பழிவாங்க எண்ணம் கொண்டான். அதனாலேயே சூழ்ச்சியினால் தர்மபுத்ரரைத் தோற்கடித்து ஸபையில் த்ரௌபதியை அவமானப்படுத்தினான். பிறகு மிகப்பெரிய பாரதப் போரும் நடந்தது. மற்றவரைப் பார்த்து பரிஹஸிப்பதால் இப்படியொரு பெரிய அனர்த்தம் ஏற்படுகிறது. அதனால் மற்றவருடைய ரூபத்தைப் பார்த்தோ, செய்கையைப் பார்த்தோ பரிஹஸிப்பதை எப்பொழுதும் தவிர்க்க வேண்டும்.

# அளவிலா விளையாட்டுடையான்

### புள்ளின்வாய் கீண்டான்

ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் பகவானுக்கு ''தர்பஹா'' என்று ஒரு நாமா. ''தர்பஹா தர்பதோ த்ருப்தோ'' என்பது அந்த ஶ்லோகம். ''தர்பஹா'' என்றால் கர்வத்தைப் போக்குபவன் அல்லது அதர்ம வழியில் சென்று கர்வ செருக்குடன் உள்ளவர்களை அழிப்பவன் என்பது பொருள். ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு, ராவணன், கம்ஸன் போன்ற துஷ்டர்கள் தங்களுடைய பலத்தினாலும். தபஸினாலும், அதிகாரத்தினாலும் கர்வமுற்று ஜனங்களை ஹிம்ஸித்தனர். அப்பொழுது, பகவான் அவர்களுடைய கர்வத்தை அடக்கி அவர்களை அழித்தான்.

இப்படி துஷ்டர்களை நிக்ரஹிக்கும் பகவான் தன் பக்தர்களுடைய கர்வத்தையும் நீக்குகிறான். அதையும் அவர்களுடைய க்ஷேமத்திற்காகவே செய்கிறான். மஹாபாரதத்தில் கருடனுடைய கர்வத்தை பகவான் அடக்கியதாக ஒரு சரித்ரம் உண்டு.

ஒரு ஸமயம், இந்த்ரனுடைய தேரோட்டியான மாதலி, தன்னுடைய பெண்ணான குணகேசிக்கு நல்ல வரனைத் தேடி நாரதருடன் எல்லா லோகங்களுக்கும் சென்றான். கடைசியில், வாசுகியால் காப்பாற்றப்பட்டு வந்த போகவதி என்கிற பட்டிணத்தில் 'ஸுமுகன்' என்கிற நாகத்தை தன்னுடைய மாப்பிள்ளையாகத் தேர்ந்தெடுத்தான். ஆனால், அந்த ஸுமுகன் என்கிறவனை, கருடன் தன்னுடைய ஆஹாரமாக்கிக்கொள்ள முதலிலேயே தீர்மானித்திருந்தான். மாதலியோ ஸுமுகன்தான் தனக்கு மாப்பிள்ளையாக வரவேண்டும் என்று பிடிவாதமாக இருந்தான். அதனால் நாரதர் ஸுமுகனையும் தங்களுடன் அழைத்துக்கொண்டு நேராக இந்த்ரலோகம் சென்றார். அப்பொழுது இந்த்ரனுடன் யத்ருச்சையாக ஶங்க சக்ரதாரியான பகவானும் இருந்தார்.

பகவானுடைய அனுக்ரஹத்தினால் இந்த்ரன் ஸுமுகனுக்கு பூர்ண ஆயுஸைக் கொடுத்தான். அதன் மூலம் ஸுமுகனுக்கும் குணகேசிக்கும் ஶுபமாக விவாஹம் நடந்தது.

இந்த விஷயத்தைக் கேள்வியுற்ற கருடன், மிகுந்த சினத்துடன் இந்த்ரனிடம் வந்து, ''இந்த்ர! என்னுடைய ஜீவனமானது என்னை

அவமதித்து உன்னால் கெடுக்கப்பட்டது. எனக்கு இஷ்டப்படிச் செய்ய வரத்தை அளித்துவிட்டுத் தவறியவனாக ஆகிறாய். இந்தப் பெரிய நாகமானது என்னால் வரிக்கப்பட்டது. நான் இவனைக்கொண்டு என் குடும்பத்தைப் போஷிக்கவேண்டும். ஓ! தேவ! இது இவ்விதம் இருக்கையில் வேறு ஒரு நாகத்தைக் கொல்லமாட்டேன். இந்த்ர! விரும்பியதை விரும்பியபடி செய்துகொண்டு விளையாடுகிறாய். நானும் எனது சுற்றத்தாரும் உன்னால் ப்ராணனை விடப்போகிறோம். நீ ஸந்தோஷமாயிரு'' என்று கூறினான்.

அப்பொழுது ஸுமுகன் என்ற அந்த நாகன் பாம்பு ரூபத்தை எடுத்துக்கொண்டு பயத்துடன் ஸ்ரீ விஷ்ணுவினுடைய பாத பீடத்தைச் சுற்றிக் கொண்டான். இந்த்ரனும் கருடனைப் பார்த்து, ''கருடா! இது என் செய்கையில்லை. கோபிக்காதே. இந்த ஸுமுகன் விஷ்ணுவினாலே அபயமளிக்கப்பட்டான்'' என்று சொல்ல, உடனே கருடன் இந்த்ரனைப் பார்த்து, ''வ்ருத்ராஸுரனைக் கொன்றவனே! மிகுந்த பலசாலியாக இருந்தும் பிறருக்கு அடிமையாயுள்ள எனக்கு இதுவும் தகும். இதற்கு மேலும் தகும். தேவேஶ! நீ இருக்க எனக்கு விஷ்ணு காரணம் இல்லை. உன்னிடமன்றோ ராஜ்யம் ஶாஶ்வதமாயுள்ளது. எனக்கும் கஶ்யபர் தந்தை! என்னுடைய தாய் தக்ஷனுடைய புத்ரி. எனக்கும் எல்லோரைக் காட்டிலும் சிறந்த பலமிருக்கிறது. நானும் தேவாஸுர யுத்தத்தில் பல அஸுரர்களைக் கொன்றிருக்கிறேன். நான் உன்னுடைய தம்பியை (வாமனனாகிய பகவான்) சுமப்பதாலும், அவனுடைய த்வஜத்தினுடைய (கொடியினுடைய) ஸ்தானத்தை அடைந்து பணிவிடை செய்வதாலுமே என்னை அவமதிக்கிறாய். இவரை பந்துக்களுடன் சுமக்கிற என்னைக் காட்டிலும் சிறந்த பலசாலி லோகத்தில் யாருண்டு, இந்த்ர! உன்னாலும், இவராலும் என்னுடைய கௌரடமாவது அழிந்துவிட்டது'' என்று கூறி விஷ்ணுவைப் பார்த்து, ''அதிதியிடம் பிறந்த இவர்கள் எல்லோரைக் காட்டிலும் பலத்தில் சிறந்தவரல்லவா நீர். அப்படிப்பட்ட உம்மையே நான் ஶ்ரமமில்லாமல் சுமக்கிறேன் என்றால் யார் பகவான் என்ற நீரே ஆலோசியும்'' என்றான்.

உடனே பகவான் குரூரமான வார்த்தையைக் கேட்டு, கலக்க முடியாதவனான கருடனைக் கலங்கச் செய்வதற்காக, ''கருடா! பலமில்லாதவனான உன்னை மிகுந்த பலமுடையவனாக நினைத்துக் கொள்கிறாய். நமக்கு எதிரில் நீ உன்னைத் துதித்தது போதும். மூவுலகும் முழுமையும் என்னைத் தாங்குவதில் சக்தியில்லாதது. நானே என்னால்

என்னையும், உன்னையும் தாங்குகிறேன். நீ கைகளால் என்னைச் சுமக்கவில்லை. நீ புகழ்ந்து கொள்வது வீண். நீ என்னுடைய இந்த வலக்கையை மட்டும் சுமக்கக் கடவாய். அப்படிச் சுமந்தாயானால் நீ புகழ்ந்து கொள்வது தகும்'' என்று கூறி கருடனுடைய தோளில் கையை வைத்தார்.

கருடனோ அந்த ஹஸ்தத்தினுடைய பாரத்தை சுமக்க முடியாமல் பாரத்தால் பீடிக்கப்பட்டு சோர்வடைந்து அறிவிழந்து விழுந்தான். பகவானான அச்சுதர் அவனை பாரத்தினால் பீடிக்கவில்லை. அதனால் அவனுடைய உயிரை நசிக்கச் செய்யவில்லை. அப்பொழுது பக்ஷியானவன் சரீரம் நசிந்து தீனனாகி பகவானைத் தலையால் வனங்கி மிகவும் பேசமுடியாமல் பகவானைப் பார்த்து, ''ஓ பகவானே! தளர்ச்சியடைந்தவனாய் பாரத்தால் பீடிக்கப்பட்டவனும் த்வஜத்தில் வஸிக்கின்றவனுமான என்னுடைய விஷயத்தில் பொறுமை காட்ட வேண்டும். தேவேஶ! ஹே! விபோ! சிறந்ததான உம்முடைய பலம் என்றால் அறியப்படவில்லை'' என்றான்.

பிறக பகவான் கருடனை அனுக்ரஹித்தார். அப்பொழுது ப்ரியத்தினால் அவனை நோக்கி, ''இனிமேல் இவ்விதம் செய்யாதே'' என்றும் சொன்னார். கால் கட்டைவிரலினால் ஸுமுகன் என்ற நாகனை கருடனுடைய மார்பில் எறிந்தார். அது முதல் கருடனும் அந்த நாகத்தை கழுத்தில் ஆபரணமாக அணிந்துகொண்டு எப்பொழுதும் ஸர்பத்துடன் கூடியிருக்கிறான்.

இந்த நிகழ்ச்சியை கன்வ மஹர்ஷியானவர் துரியோதனனுடைய ஸபையில், தூதுவனாக வந்த க்ருஷ்ணனுடைய மாஹாத்ம்யத்தை, துரியோதனனுக்கு உரைக்கும்பொழுது கூறினார்.

இப்படி பக்தர்களுடைய கர்வத்தை அழிப்பது என்பது பக்தர்களுடைய அனுக்ரஹித்தற்காகத்தான். யாரை பகவான் தன்னைச் சேர்ந்தவன் என்று எண்ணுகிறானோ அவனுடைய கர்வத்தைப் போக்கி அவனைத் திருத்தி ஆட்கொள்கிறான். அவனுடைய மற்ற தவறுகளையும் தானே திருத்துகிறான். ஆனால் அசுரர்கள், ராக்ஷஸர்கள் முதலியோருடைய கர்வத்தை அடக்கி அவர்களை அழிக்கிறார். அதுவும் லோகஹிதத்திற்காகவே செய்யப்படுகிறது. ஏனெனில் அவர்களுடைய பலமோ, கர்வமோ பகவானை ஒன்றும் செய்யமுடியாது.

அதே போல் கருடனுடைய கர்வ பங்கம் என்பதும் ஒரு லீலையே. இது லோகத்திற்கு ஒரு பாடம் தானேயொழிய கர்வப்பட்டான் என்று கருடனை குறைவாக நினைக்க முடியாது. ஏனெனில் கருடனுடைய மஹாத்மியம் மிகவும் உயர்ந்தது. அவர் ஸாக்ஷாத் வேதஸ்வரூபி. ஆதிஶேஷன், கருடன், ஸுதர்ஶன சக்ரம், சங்கம் முதலிய அனைத்துமே பகவத் ஸ்வரூபங்கள்.

புள் என்றால் பறவை என்று பொருள். பறவையான கருடனுடைய வார்த்தையை தகர்த்தான் என்பதால் பகவான் புள்ளின்வாய் கீண்டவன். இப்படி பகவான் அளவிலா விளையாட்டுடையவனாக திகழ்கிறான்.

# செய்திகள்

### ஜூன் 19-ந் தேதி

திருமழிசைபிரான் திருக்கோவில் ப்ரஹ்மோத்ஸவம் - 8-ஆம் நாள் மாலை தங்கத்தோளுக்கினியான் கட்டளை நம் மிஷன் சார்பில் நடைபெற்றது.

### ஜூன் 27-ந் தேதி

மும்பை, மாதுங்கா, சௌத் இந்தியன் பஜன் ஸமாஜ் ஸார்பில் நம் ஸ்வாமிகள் முன்னிலையில் திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

### ஜூலை 1, 2 தேதிகள்

சென்னை ஊரப்பாக்கம், பகவந் நாமப்ரசார மண்டலி ஸார்பில் நம் ஸ்வாமிகள் முன்னிலையில் ராதா கல்யாணம் நடைபெற்றது.

### ஜூலை 12, 13 தேதிகள்

இரவு 7.30 மணி முதல் இரவு 9.00 வரை சென்னை, உள்ளகரம், ஸத்குரு ஸ்ரீ ஞானானந்த நாமஸங்கீர்த்தனாலயா ட்ரஸ்ட் ஸார்பில் ஸ்ரீ துகாராம் சரித்ரம், ஸ்ரீ ஏகநாதர் சரித்ரம் பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் உபன்யாஸம் செய்தார்கள். ஜூலை 12-ந் தேதி இரவு 9 மணி முதல் ஸ்ரீ ஸ்வாமிகள் முன்னிலையில் ஆஷாட ஏகாதஶீயை முன்னிட்டு திவ்யநாம ஸங்கீர்த்தனம் நடைபெற்றது.

# ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸம்பாஷனைகளிலிருந்து - 60

*செப்படி வித்தை கற்றிப்படி மயக்கம் விட்டு*
*உருப்படும் வித்தை காட்டு அருணாசலா*

- சென்ற இதழ் தொடர்ச்சி

இருவர் கடைத்தெருவிற்கு செல்கின்றனர். கடைத்தெருவில் பெரும் கூட்டம். ஒருவர் சில பொருள்கள் வாங்குகின்றார். அதில் உள்ள பொருள்களின் விலையைக் கேட்டு, சில பொருட்கள் விலை அதிகம் என்றும், சில பொருட்கள் விலை குறைவு என்றும் அங்குள்ளோர் கூறுகின்றனர். இந்த பொருள்களை வாங்கியதில் உள்ள லாப, நஷ்டங்கள் வாங்கியவரையே சாரும். மற்றொருவரோ கடைத்தெருவிற்குள் சென்றாலும் ஒன்றும் வாங்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டே செல்கிறார். அவருக்கு லாப, நஷ்டமே இல்லை. அது போல் லௌகீக விஷயங்களில் பிரவர்த்திப்பவனுக்கு சுக, துக்கம் உண்டு. ஆனால் லௌகீக விஷயங்களைப் பார்த்துக்கொண்டு செல்பவனுக்கு சுகமுமில்லை, துக்கமுமில்லை. கடவுளின் உருவானது மனதில் படக்கூடிய வித்தையே ஆத்மவிசாரம் எனும் வித்தையை. அந்த வித்தையையே இங்கு ஸ்ரீரமண மஹரிஷிகள் கேட்கிறார்.

ஆத்மவிசாரம் செய்யும் காலத்தில் நாம் வேறு எந்த உபாஸனைகளையும் கைக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. சித்தசுத்திக்காக என்று வேறு எந்த ஒரு ஸாதனையையும் கைகொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், கர்ம அனுஷ்டானங்களோ, மீதி ஸாதனைகளோ ஒருவருக்கு மோக்ஷத்தில் ஆசை உண்டு பண்ணு வதற்காகவே சொல்லி உள்ளன. ஞானம் அடைவதற்கு ஆசை வந்துவிட்டால், அத்தகைய ஸாதனைகளை கைகொள்ள வேண்டிய அவசியமில்லை.

ஒரு டம்ளர் இருக்கிறது. டம்ளரில் பழைய ஜலமிருந்ததில் தூசியும் அழுக்குமிருந்தது. ஒருவரிடம் இதை தேய்த்து வருமாறு சொல்கிறோம். அவர் தேய்த்துக்கொண்டு வந்தால் சரி. அங்ஙனம் அல்லாது தேய்த்துக் கொண்டே இருந்தால் என்ன பயன்? தேய்ப்பதே டம்ளரில் உள்ள

அழுக்கை எடுப்பதற்கு மட்டுமே. அழுக்கு போன பின்பும் அவர் தேய்த்துக்கொண்டே இருந்தால், எதற்காக தேய்க்கிறோம் என்று அவருக்குத் தெரியவில்லை என்று ஆகிறது.

அதுபோல் கர்ம ஆசாரங்கள் எல்லாம் சித்தத்தை சுத்தம் செய்து, 'கர்மத்வாரா' ஞானத்தை அடையவே சொல்லியுள்ளன தவிர, கர்மங்களையே செய்துகொண்டிருப்பது என்பது லக்ஷியமில்லை. ஸர்வ ஶாஸ்திரங்களுடைய ஸாரம் விவேகம் ஏற்பட்டு மோக்ஷத்திற்காக பாடுபடவேண்டும் என்பதே. மேலும் கர்மங்களையே பண்ணிக் கொண்டிருப்பதனால் (சித்த சுத்தி அடைந்த பின்னரும்) யாதொரு பயனும் இராது. ஆக, ஆத்மவிசாரம் பயில்கிறவர்கள் என்ன செய்ய வேண்டும்? ஒன்றும் தேவை இல்லை. பார்வையை நன்றாக உள்முகமாக திருப்பி நிலைநிறுத்திக்கொண்டு, அதையே பழக்கப்படுத்திக்கொண்டு வர வேண்டும். பார்வை உள்முகப்படவில்லை என்றால், ஞானம் வரவே வராது.

ப்ராணனை லேசாக பந்தப்படுத்தி, பார்வையை உள்முகமாய் திருப்பி எண்ணங்கள் எங்கிருந்து எழும்புகின்றன என்று பார்க்க வேண்டும். ப்ராணனை பந்தப்படுத்தவேண்டும் என்பதற்காக ப்ராணாயாமங்கள் எல்லாம் செய்யலாகாது. எந்த ஒரு ஸாதனை செய்யும்பொழுதும் அதி சிரமப்படல் ஆகாது. ஆதலால், Gracefulஆக யாதொரு சிரமமின்றி ப்ராணனை லேசாக பந்தப்படுத்தி எண்ணங்கள் எழுமிடத்தை உள்முகப் பார்வையால் கண்டுபிடிக்கவேண்டும்.

இவ்வாறு அப்யாஸிப்பதால் ஒரு நாளிலோ, ஒரு மணி நேரத்திலோ மனதின் உற்பத்தி ஸ்தானத்தை கண்டுபிடித்தல் முடியாது. மேலும் தியானம் அப்யாஸிக்க ஆரம்பித்த எவர்க்கும் அப்படி ஸித்திக்கவும் இல்லை. தியானம் பண்ணுவது என்று முடிவு செய்து உட்கார்ந்த பிறகு, தியானம் வரவில்லை என்று விட்டுவிடுவதும் சரியல்ல. ஒரு நாளில் தியானம் கைகூடும் என்று எந்த மஹாத்மாவும் உபதேஸிக்கவுமில்லை.

ஒருவர் மிக்க வருத்தப்பட்டுக்கொண்டார். அவர் 2 வருடமாக தியானம் பழகியும் ஒருவித அனுபவமும் ஏற்படவில்லையே என்று. ஒரு பெரியார் அவரைப் பார்த்து, ''நீங்கள் தினம் எத்தனை மணிநேரம் தியானத்திற்காக செலவிடுகிறீர்கள்'' என்று கேட்டார். அவர் பதில் சொன்னார், ''தினம் காலை பத்து நிமிடங்கள்?'' என்று. இப்படி தியானம் செய்வதால் தியானம் வாராது. தியானம் செய்வதற்கு தளராத முயற்சி

வேண்டும். எத்தனை தடைகளும், ஸஞ்சலங்களும் ஏற்படினும், கலங்காது, ஊக்கத்தை கைவிடாது, உற்சாகத்துடனும், தைர்யமுடனும் மனதை உள்முகப் பார்வையில் பழக்கப்படுத்திக்கொண்டு இருந்தால், உற்பத்தி ஸ்தானம் பிடிபட ஆரம்பிக்கும்.

முதலில் சிறிது சிறிதாகத்தான் அனுபவங்களேற்படும். பின்னர் மனதின் உற்பத்தி ஸ்தானம் நன்கு பிடிபட்டவுடன், மனது லயமாகுவதும், குவிந்து விரிவதும் அனுபவத்தில் நன்கு தெரியவரும். இக் காலத்தில் உடலில் பல எரிச்சல்கள் ஏற்படும். நாடியில் ஸலனங்கள் உண்டாகும். ஆனால் ஸாதகனுக்கு இதில் லக்ஷியம் இருத்தல் கூடாது. புருவமத்தியில் ஒரு ஜோதியானது தோன்றும். ஹ்ருதயத்தில் ஒரு கோவில் மணியை அடித்துவிட்டால், என்ன சப்தம் கேட்குமோ அப்படி ஒரு சப்தம் கேட்கும். முதுகுத்தண்டுவடத்திலிருந்து ஏதோ ஒன்று கிளம்பி மேலே போவது போலத் தோன்றும். இவை எல்லாம் ஒரு ஸாதகன் முன்னேறுகிறான் என்பதையே காட்டுகிறது.

ஆத்மவிசாரம் ஒருவகை தியானமே. அப்படி நன்றாக எண்ணங்களை கவனிக்கையில் எண்ணங்கள் உற்பத்தி ஸ்தானத்தில் இருந்து கிளம்பி ஸஹஸ்ராரத்திற்கு செல்வது நன்கு தெரியும். அவ்வாறு கிளம்பும்பொழுது ஒரு ஜோதி போல் கிளம்பிச் செல்லும். அதை நாம் புத்திபூர்வமாய் உற்பத்தி ஸ்தானத்திலேயே ஒடுக்கவேண்டும்.

இவ்வாறு எண்ணங்களை உற்பத்தி ஸ்தானத்திலேயே ஒடுக்குவதினால் எண்ணங்களுக்கு உற்பத்தி ஸ்தானத்தில் இருக்கும் சக்தி அதிகரிக்கும். இது அப்யஸிக்க நன்கு தெரியவரும். ஏனெனில், மனம் பழக்கத்துக்கு அடிமையாகும். முதலில் அதி ஶ்ரமமாயிருப்பது பின்னர் அதி சுலபமாகிவிடும். நாம் கண்ணை மூடி உட்கார்ந்தால் எண்ணங்கள் கிளம்பி ஸஹஸ்ராரத்திற்கு ஓடாமல் நாம் எண்ணங்களை உற்பத்தி ஸ்தானத்திலேயே பந்தப்படுத்தி பழக்கப்படுத்திவிட்டதனால், அது தானாகவே பந்தப்படுவதையும் அறியலாம்.

இது போல், ஸாதனை பழகும் காலத்தில் இந்த மனதை அடக்க எவ்வளவு நாளாகும், இது நமக்கு வருமா, வராதா, இது மிகவும் கஷ்டமாக இருக்கின்றதே, நாம் போகும் வழி சரியா என்று அந்த விதத்தில் கூட மனதை சலித்துக்கொள்ளவோ, அதைர்யப்படவோ கூடாது.

உள்ளுக்குள் ஏற்படும் அனாஹத சப்தம், ஜோதி தரிசனம் போன்ற அனுபவங்களிலும் மனதைச் செலுத்தி மயங்காது, விசாரத்திலேயே

மீண்டும் மீண்டும் போகவேண்டும். விசாரத்தை தீவிரமாக அப்யாஸிப்பதனால் மனதினுள் மண்டிக்கிடக்கும் வாஸனைகள் கிளம்பும். அதனாலும் கலங்கலாகாது. முன்னிலும் விட அதிகமாக எண்ணங்கள் ஸாதனை கைகொள்ளும்போது வரவே செய்யும். ஒரு பெரிய கோட்டையை தன் வசமாக்க வேண்டுமானால், அதில் இருக்கும் அத்தனை சிப்பாய்களையும் கொன்றால்தானே அது கூடும்? அது போல், உள் இருக்கும் அனைத்து கர்ம வாசனைகளும் அழிந்தால்தான் மனது அழிந்து, மோக்ஷம் கிட்டும்.

மோக்ஷத்திற்காக ஒருவன் பாடுபடுகிறவனாக இருந்தால், அவன் நிச்சயம் பல ஜன்மங்களில் ஸத்விஷயங்களில் ஈடுபட்டவனாக இருப்பான். ஏதாவது ஒரு தெய்வத்திடம் ஈடுபாடு கொண்டவனாய் இருந்திருப்பான். இவன் பூர்வத்தில் செய்த குரு பூஜையோ, தெய்வ பூஜையோ ஸம்ஸ்கார பலமாக மனதினுள் இருக்கும். இந்த ஜன்மத்தில் பூர்வ புண்ணியத்தின் காரணமாய், தெய்வ அருளால் ஒரு உத்தமமான ஸத்குருவை அடைந்து, ஸாதனைகளை அப்யஸிக்கையில், இவன் பூர்வத்தில் செய்த தெய்வீகமான விஷயங்கள் வெளிவர ஆரம்பிக்கும். அதனால் அந்த தேவதைகளின் தரிசனம், ஞாபகம், சிந்தனைகளும் வர ஆரம்பிக்கும். அவற்றிலும் மயங்காமல் ஸாதகன் முன்னிலும் ஊக்கமாய் ஆத்மவிசாரத்தில் ஈடுபட வேண்டும்.

ஶங்க சக்ர கதாதாரணாக ஸ்ரீஹரி வந்தாலும், புஷ்ப பாணங்களோடு தேவி வந்தாலும் அல்லது ருத்ராக்ஷமாலாபரணாக பரமேஶ்வரன் வந்தாலும் இந்த ஸ்வாமி நமக்கு அன்னியமாய் நம் மனதில்தானே நிற்கிறார். இதைப் பார்ப்பது யார் என்று மனதை திருப்ப வேண்டும். பரமேஶ்வரனோ, பெருமாளோ தோன்றி மறைகின்றனர். நழுவாத ஒரு காட்சி வேண்டும். அதுவே உண்மையான அனுபவம். அந்த அனுபவத்திற்காக வேண்டி, மனதை உற்பத்தி ஸ்தானத்திலேயே ஒடுக்குதல் அவசியம்.

மேற்கூறிய அனுபவங்கள் இன்றுதான் தியானமோ, விசாரமோ துவங்குபவர்க்கு ஏற்படக்கூடியவை அல்ல. இப்படி எண்ணங்கள் ஒவ்வொன்றாய் அடிபட்டு வரும்பொழுது சரீரத்தில் பல சிரமங்கள் ஏற்பட்டாலும் கூட, மிக ஆச்சரியகரமாய் அமானுஷ்யமான விஷயங்களும் ஏற்படும். த்யானம் பண்ணும்பொழுது வலி ஏற்படலாம். அதையும் மீறி ஒரு ஆனந்தம் ஏற்படும். மிகவும் குறைத்து சாப்பிட்டாலும் கூட பசிக்காது. பசியும் குறைந்தே இருக்கும். பேச வேண்டும் என்றே

தோணாது. மித ஆகாரம், மிதப் பேச்சு, மித நித்திரை என்பது ஸ்வபாவமாய் ஏற்பட்டு விடும். யார் பேசினாலும் மறுபடியும் தியானத்துக்குப் போகமாட்டோமா என்று தோன்றும். தூங்குகிறவனை எழுப்பினால், ஏதாவது ஒரு காரியம் கொடுத்தால், அவன் மறுபடியும் தூங்கவே செல்வது போல், தியானம் நன்கு கைகூடினவனுக்கு அதை விட்டுப் பிரிந்திருக்கத் தோன்றாது. யாருடன் பேசிக்கொண்டிருந்தாலும் மறுபடி தியானத்துக்கே செல்ல விரும்புவான்.

இந்த மாதிரி ஆனந்தம் ஏற்படும்பொழுது, எப்பொழுது இவன் முன்னேறுவான் என்றால், இந்த Life Current என்று சொல்கிறார்களே, வலது மார்பில் ஆத்ம ஸ்புரணம் ஏற்படும்பொழுது முன்னேறுவான். இதை பகவான், 'சித்தம் குளிரக்கதி அஸ்தம் வைத்து உன் **அமுத வாயைத் திற அருண்மதி அருணாசலா''** என்கிறார். அது வந்தால் ஸாதகனுக்கு தியானத்தில் உட்கார்ந்தவுடனேயே ஒரு Bliss ஆனந்தம் கைகூடும். அப்பொழுது முன்னேறுவது சுலபம். அப்பொழுது ஏற்படும் சித்திகளில் எல்லாம் மனதை செலுத்தாது தொடர்ந்து விசாரத்தில் முயன்றவராயிருந்தால் கடைசி எண்ணமும் எழுந்து, அடங்கி, உள், வெளி இல்லாத ஒரு பேரானந்தத்தில் நாம் கலந்துவிடலாம். பெரிய ஜோதியில் கலந்து விடலாம். அதற்குப் பிறகு ஸாதகனுக்கு ஊருமில்லை, பேருமில்லை, சரீரமில்லை, பார்ப்பது என்பது இல்லை, எல்லாம் ஒரே வஸ்துவாய் இருக்கிறதே என்று ப்ரஹ்மானந்தம் ஏற்படும்.

அப்பேர்ப்பட்ட ஆத்மவிசாரம் எனும் உயர்ந்த வித்தையைதான் இங்கு ''உருப்படும் வித்தை'' என்கிறார். அது குருவருளன்றி ஏற்படாது என்பதால் அதை ''உருப்படும் வித்தை காட்டு'' காட்டிக் கொடு என்கிறார்.

(தொடரும்)

---

செய்திகள் (தொடர்ச்சி)

## ஜூலை 16-ந் தேதி முதல் ஜூலை 19-ந் தேதி வரை

பெங்களூர் அல்ஸூர், ஸ்ரீ ஸாய் ஸமாஜ் சார்பில், ஸ்ரீ ஷீரடி ஸாய்பாபா கோவிலில், ஜூலை 16-ந் தேதியன்று ''குரு பூர்ணிமா'' ஒட்டி நம் ஸ்வாமிகள் முன்னிலையில் வ்யாஸ பூஜை நடைபெற்றது.

17-ந் தேதி முதல் 19-ந் தேதி வரை ''குரு பரம்பரை'' பற்றி பல மஹான்களின் சரித்ரங்களை நம் ஸ்வாமிகள் இரவு 6.45 முதல் இரவு 8.30 வரை உபன்யாஸம் செய்தார்கள்.